## யூலை – 21 – சனி

### புனித பிறின்டிசி லோறன்ஸ்

**எவராலும் என்னை அசைக்க முடியாது: எந்தத் தலைமுறையிலும் எனக்குக் கேடுவராது' திபா. 10:6**

**முதல் வாசகம் : மீக்கா2 : 1 – 5**

தங்கள் படுக்கைகளின்மேல் சாய்ந்து தீச்செயல் புரியத் திட்டமிட்டுக் கொடுமைசெய்ய முயல்பவர்களுக்கு ஐயோகேடு! பொழுது புலர்ந்தவுடன் தங்கள் கைவலிமையினால் அவர்கள் அதைச்செய்து முடிக்கின்றார்கள்.வயல்வெளிகள்மீது ஆசை கொண்டு, அவற்றைப் பறித்துக்கொள்கின்றார்கள் வீடுகள்மேல் இச்சைகொண்டு அவற்றைக் கைப்பற்றிக்கொள்கின்றார்கள் ஆண்களை ஒடுக்கி, அவர்கள் வீட்டையும் உரிமைச்சொத்தையும் பறிமுதல் செய்கின்றார்கள். ஆதலால் ஆண்டவர் கூறுவது இதுவே. "இந்த இனத்தாருக்கு எதிராகத் தீமைசெய்யத் திட்டமிடுகிறேன் அதனினின்று உங்கள் தலையை விடுவிக்க உங்களால் இயலாது. நீங்கள் ஆணவம்கொண்டு நடக்கமாட்டீர்கள் ஏனெனில் காலம் தீயதாய் இருக்கும். அந்நாளில் மக்கள் உங்களைப்பற்றி இரங்கற்பா இயற்றி, "அந்தோ! நாங்கள் அழிந்து ஒழிந்தோமே ஆண்டவருடைய மக்களின் உரிமைச்சொத்து கைமாறிவிட்டதே! நம்முடைய நிலங்களைப் பிடுங்கிக் கொள்ளைக்காரர்களுக்குப் பகிர்ந்தளிக்கின்றாரே! என்று ஒப்பாரி வைத்துப்புலம்புவார்கள். ஆதலால், நூல்பிடித்துப் பாகம் பிரித்து உங்களுக்குத் தருபவன் எவனும் ஆண்டவரின் சபையில் இரான்.

**பதில்பாடல் :** ஆண்டவரே எளியோரை மறந்துவிடாதேயும்

**நற்செய்தி : மத்தேயு 12 : 14 – 22**

அக்காலத்தில் பரிசேயரோ வெளியேறி இயேசுவை எப்படி ஒழிக்கலாம் என அவருக்கு எதிராகச் சூழ்ச்சிசெய்தனர்.இயேசு அதை அறிந்து அங்கிருந்து புறப்பட்டுச்சென்றார். பலர் அவருக்குப்பின் சென்றனர். அவர்களெல்லாரையும் அவர் குணமாக்கினார். தம்மைக்குறித்து வெளிப்படையாகப் பேச வேண்டாம் என அவர்களிடம் அவர் கண்டிப்பாகச் சொன்னார்.இறைவாக்கினராகிய எசாயா உரைத்த பின்வரும் வாக்குகள் இவ்வாறு நிறைவேறின. "இதோ என் ஊழியர் இவர் நான் தேர்ந்துகொண்டவர். இவரே என் அன்பர் இவரால் என்நெஞ்சம் பூரிப்படைகிறது. இவருள் என் ஆவி தங்கும்படிசெய்தேன் இவர் மக்களினங்களுக்கு நீதியை அறிவிப்பார்.இவர் சண்டைசச்சரவு செய்யமாட்டார் கூக்குரலிடமாட்டார் தம்குரலைத்தெருவில் எழுப்பவு மாட்டார் நீதியை வெற்றிபெறச்செய்யும்வரை,நெரிந்த நாணலை முறியார். புகையும்திரியை அணையார்.எல்லா மக்களினங்களும் இவர்பெயரில் நம்பிக்கை கொள்வர்."பேய்பிடித்த ஒருவரை இயேசுவிடம் கொண்டுவந்தனர். அவர் பார்வையற்றவரும் பேச்சற்றவருமாக இருந்தார். இயேசு அவரைக் குணமாக்கினார். பேச்சற்ற அவர் பேசவும் பார்வையற்ற அவர் பார்க்கவும் முடிந்தது.

**தியானம்:** இன்றைய தியான வாசகமானது பாவத்தில் விழுந்து இறைவனுக்கு எதிராக செய்யப்படும் எவருக்கும் தண்டனைத் தீர்ப்பு நிற்சயம் உண்டு என்பதை வெளிப்படுத்துகின்றன. ஏனெனில் அன்று இஸ்ராயேல் மக்கள் தீச்செயல்கள் புரிந்து அநீதிக்கு தலைவணங்கி வாழ்ந்து வந்ததால் ஆமோஸ் இறைவாக்கினர் அவர்களுக்கு தண்டனைத் தீர்ப்பு வழங்கினார். அதே போன்று நீங்களும் காமவெறி, களியாட்டம், குடிவெறி அவ்வாறு தீச்செயல்கள் புரிந்தீர்களாயின் உங்களுக்கு ஐயோகேடு, அழிவு நிற்சயம் உண்டு. (மீக்கா2:2) மாறாக அவ்வாறான தீச்செயல்களிலிருந்து விடுதலை பெறுவீர்களானால் உங்களுக்கு நிலையான மீட்பு நிற்சயம் என்பதையும் மீக்கா இறைவாக்கினர் யூதாவிலுள்ள மக்களுக்கு அறிவிக்கின்றார். தந்தையின் சித்தத்தை நிறைவேற்ற மண்ணிலே உதிர்த்த இறைமகன் இயேசுதான் எவ்வாறு தூய்மையான மாசுமறுவற்றவராக இவ்வுகில் வாழ்ந்து காட்டினாரோ அதே போன்று நாங்களும் தூயவர்களாக வாழ அவர் விரும்புகின்றார். அவர் யார் என்பதையும் எப்படிப்பட்டவர் என்பதையும் கிறிஸ்து பிறப்பின் முன்னே இறைவாக்கினர் எசாயா வெளிப்படுத்துகிறார்.(மத்.12:18) இன்று நாங்களும் உலகமாயைக்குள் சிக்குண்டவர்களாக தீச்செயல்களுக்கு அடிமையாகி வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஆனால் மனதிரங்கும் இயேசு பாவங்களை மன்னிக்கும் இயேசுவிடம் மன்னிப்பு வேண்டுமோயாயின் எமது பாவங்களும் மன்னிக்கப்பட்டு தண்டனைத் தீர்ப்பை பெற்றுக்கொள்ளாமல் வாழ்ந்து முடிவில்லா நிலைவாழ்வைப் பெற்றுக்கொள்ள எங்களைத் தயார்படுத்துவோம்.